1981 மார்ச் 7]

திரு. சோ. ஆறுமுகம் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால்தான், அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். அவை கூடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுத்தால்கூட, அதுபற்றி முடிவு எடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், நான் நேற்றைய தினமே கொடுத்திருக்கிறேன். இது குறித்து தகவல்களைச் சேகரிப்பதில் அப்படி என்ன சிரமம் இருக்கிறது? இப்படி நாளைக் கடத்துவது என்பது, எங்களுடைய பணியைத் தடை செய்வது போலவும், பொது மக்களுடைய பிரச்சினைகளை அலட்சியப்படுத்துவதைப் போலவும் இருப்பதால், இப்படிப் பட்ட பிரச்சினைகளுக்கு நீங்கள்தான் முடிவு கட்ட வேண்டும். ஆகவே உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதற்குத் தீர்ப்புத் தேவையில்லை. ஏற்கெனவே சொன்னதுதான் கருத்து.

(2) வினாக்கள்-விடைகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தினந்தோறும் வரும் வினாப் பட்டியலில் இப்போது வினாக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. நான் விசாரித்ததில், சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில்கள் வரவில்லை என்று அறிந்தேன். அது சரியோ, தவறோ என்பது தெரியாது. கேள்விகள் முன்பே அனுமதிக்கப்பட்டு அது சேர்க்கப்பட்ட பிறகும்கூட, சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில் வரவில்லை என்பது சரியல்ல. ஒவ்வொரு நாளும் 10 கேள்விகள் எடுத்துக்கொள்ளுவதற்குப் பதிலாக ஐந்து கேள்விகள்தான் இப்போது எடுத்துக்கொள்ளுகிறோம். இது குறித்து மாண்புமிகு தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளை அமைச்சர்கள் துறைகளுக்கு அனுப்புகிறார்கள். அங்கிருந்து பதில் வந்தவுடனே ஒன்றையும் நிறுத்தாமல் எடுத்துக் கொள்ளுகிறோம். சில நேரங்களில் பத்துக் கேள்விகளுக்கு மேலாகக் கூட போடுகிறோம். குறைவாகப் போட்டது வேண்டுமென்றே போடவில்லை. பதில் வராததால்தான் சேர்க்கவில்லை. இனி துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, 40, 45 நாட்களுக்குள் பதில் தராவிட்டால், வினாக்களை வினாப் பட்டியலில் சேர்த்துவிட வேண்டும் என்று தாங்களே முன்னால் அறிவித்திருக்கிறீர்கள். அப்படியும் பல

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY · TRUTH ALONE TRIUMPHS · வாய்மையே வெல்லும்

கேள்விகளுக்குப் பதில் வராமல் இருக்கிறது. நீங்கள் ஆணை பிறப்பித்தும் பதில் வசவமைக்க முடியவில்லை. அதுபோலவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தால், அதற்குரிய புள்ளிவிவரத்தோடு மறு நாளே எடுத்துக்கொள்ளா விட்டால், எந்த நோக்கத்தோடு அந்தத் தீர்மானத்தைக் கொடுத்தோமோ அந்த நோக்கமே தோல்வி அடைகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லாக் கேள்விகளும் அப்படி அமைவ தில்லை. சில கேள்விகள் உடனடியாகப் பதில் சொல்வதாக இருக்கின்றன. சில கேள்விகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பி தகவல் சேகரிக்க வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆகவே தகவல் சேகரிப்பதில் நின்றிருக் கின்றன என்று நினைக்கிறேன். நான் பரிசிலனை செய்து பார்க்கிறேன். அவசியம் இல்லாமல் நாட்கள் தள்ளப்படுவதில்லை.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் திங்கட்கிழமையாவது எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்படிச் சொல்ல முடியாது. தகவல் வந்தால்தான் எடுத்துக்கொள்ள முடியும்.

4. கவன ஈர்ப்பு.

(1) சென்னை, தி. நகர் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் திரு. பி. டி. அரசு என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து ஆசிரி யர்கள் நடத்திய போராட்டம் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :

"சென்னை தி. நகர் மேல்நிலைப் பள்ளியில் 22 ஆண்டு பணிக்காலம் உடைய ஆசிரியர் திரு. பி. டி. அரசு என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வருவதால் அப்பகுதிவாழ் பெற்றோர் மாணவர்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 378 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.